# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௨ம். புத்தகம், சஞ்சிகை ௫.] ௲௮௱௫௰௨ம் ௵ பங்குனி ௴ ௰௧ உ. வியாழக்கிழமை.—Thursday, March 11, 1852. [Vol. XII. No. 5.


## மட்டைக்காஸ்கர் தீவிலுண்டான துன்பப் படுத்தல்.

[Persecutions in Madagascar.]

இவ்விடத்திற் பிறகிட்ட, ௲௫ ம். ஆண்டு கிறிஸ்தவர்களுக்குத் துன்பப்படுத்தலுண்டாயிற்று. ௲௬ம். ஆண்டிலே குருமார் சகலரும் ஊரைவிட்டுப் போகும்படி அவ்வூர் இராசாத்தியினுற் கட்டளைவந்தினுல், கடவுள் ஆசீர்வதித்த தங்கள் பிரயாசங்களையும் அவைகளினுல் ஆசீர்வாதம்பெற்ற சனங்களையும் விட்டுப்போக ஏதுவாயிற்று. தேவவசனத்தினிமித்தம் முதன்முதல் துன்பமடைந்து மெய்ச்சாட்சி கொடுத்தவர்களுக்குள், ருசிலாமா என்னப்பட்ட ஒருத்தியிருந்தாள். அவள், தானுங் கொல்லப்படுவதை அறிந்து சொன்னதாவது: நான் அஞ்சேன். கிறிஸ்துவை விசுவாசித்ததினிமித்தந் துன்பமடையப் பாத்திரவாளியாய் எண்ணப்பட்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். மோட்சத்திலெனக்குச் சீவநம்பிக்கை உண்டென்ருள். இன்னுங் கொலைக்குத் தீர்மானமாயிருந்த இராபாலாகி என்ருெருவன் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்படுகையில், தன்னை நேசித்துத் தனக்காக மரித்த இரட்சகரைத் தான் காணவிருக்கிற சுறுக்கைப்பற்றி நினைக்கிறது தனக்கு ஆனந்தமென்று சொல்லிக் கிறிஸ்துவைக்குறித்துத் தலையாரியுடன் பேசிக்கொண்டு போனுன். இந்த இரண்டுபேருங் கிறிஸ்துவில் நித்திரையடைந்த காலத்தில் மற்றக்கிறிஸ்தவர்கள் உபத்திரவத்துக்கு அஞ்சி ஓடிப்போனபின் இப்போ ஏறக்குறையப் பதினைந்து வருடமாயிற்று. இவ்வளவுகாலமாக இராசாத்தியும் அவளுடைய துஷ்ட மந்திரிகளும் சுவிசேஷ பிரபலியத்தைத் தடுக்கிறதற்குத் தங்களாலான தத்துவத்தைச் செலுத்தியுங் கூடாமல், கிறிஸ்தவர்கள் வரவரப் பெருகினதைக்கண்டு, இனி மறுபேரும் அவர்களைப் பின்பற்ருதபடிக்கு முன்னிலுங் கொடிய ஆக்கினை செய்வதே உபாயமென்று தீர்மானம்பண்ணினுள். இந்தப்புதிய துன்பப்படுத்தலைப்பற்றி அவ்வூர்க் கிறிஸ்தவர்கள் இரண்டுபேர் இங்கிலாந்துக்கு எழுதியனுப்பின சங்கதியென்னவெனில்:

கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்த இராணுவத்தலைவனெருவனிட்ட கட்டளையைமீறின வேருெருவன் ஆக்கினை பண்ணப்பட்டபொழுது, அவன் இத்தலைவனிற் பழிவாங்க எண்ணி, இவனும் மற்றுங் கிறிஸ்தவர்களும் இன்ன நேரத்தில் தேவாராதனைக்குவந்து கூடுவார்களென்பதை அறிந்து, இராசாத்தியிடம்போய் அறிவிக்க, அவர்களைப் பிடிக்கும்படி, அவள் தன் முதற்றலையாரிகளை அவ்விடத்துக்கு அனுப்பினுள். அவர்கள் போய்ப் பார்த்தபொழுது, இரண்டாயிரம் பேருக்குமேலே வெகுசனங் கூடியிருந்து செபம்பண்ணுகிறதைக் கண்டு அதிசயித்து, இவ்வளவுபேரையும் பிடிக்கிறது அவர்களுக்குப் பிரயாசமாயிருந்ததினுல், அக்கூட்டத்தின் தலைவர் ஆரென்று அறிந்து, அவர்களுடைய இடாப்பை எடுத்தபின், ௲௨௱. பேரளவுக்குப் பிடித்து விளக்கத்துக்குக் கொண்டுவந்து, அவ்வூரில் அநீத வழமைக்கிணங்க ஒருவரையொருவர் குற்றஞ்சாற்றவும், இனி ஒருக்காலுஞ் செபம்பண்ண மாட்டோமென்று சொல்லிச் சத்தியம்பண்ணிக் கொடுக்கவும் அவர்களை நெருக்கினுர்கள். அவர்களோ அதற்கு உடன்படாமல், இதற்குப் பதினுலு வருடத்திற்குமுன் இரத்தச்சாட்சியாய் மரித்த ருசிலாமா முதலிய தேவபத்தர்களைப்போல இவர்கள் அந்தக் கட்டளைக்கு எதிர்த்து நின்ருர்கள். இராசாத்தியின்புத்திரனுங் கிறிஸதவனுய் இருந்ததினுல் அவனைத் தொடப் பயந்தார்கள். இராசாத்தியுடைய மருமகனுகிய இராமாங்கோ என்ற நாமமுள்ள ஒரு வாலிபனுங் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்திருந்தான். அவனுஞ் சத்தியம்பண்ணிக்கொடுக்கிறதற்குக் கட்டளை வந்தபொழுது, அவன் மைத்துனனுகிய இராசாத்திபுத்திரன் சொன்னயோசனை என்னவெனில்; நீ அப்படிச் செய்யாதை, ஏனென்ருல் உன்னுயிரை முடிக்கிறவன் என்னுயிரையும் முடிப்பானென்ருன். இவன் அதைக் கேட்டுக் கட்டளை கொண்டுவந்தவர்களைப் பார்த்து, நானெருக்காலும் அப்படிச்செய்வதில்லையென்ருன்.

மேன்மையிலும் பத்திவிசுவாசத்திலும் யோக்கியரான மூன்றுபேர் அக்கினிக்கிரையாகத் தீர்மானம் பண்ணப்பட்டார்கள். இவர்கள் அக்கினியிற்போடப்பட்டுச் சரீரம் எரியும்பொழுது மழையினுல் நூற்கப்பட்டும் மறுபடி மூட்டப்பட்டு இவ்விதமாக மூன்றுதரம் மழைபெய்து நெருப்பை நூர்த்தப்போட்டபடியால் அவர்கள் கொடிய உபத்திரவப்பட்டார்கள்.

இராசாத்தி புத்திரன் தலைப்போட்டுத் தன் மாதாவுடைய முதன்மந்திரிக்கு விரோதமாய்நின்று கிறிஸ்தவர்களைக் காராதபோனுல் மற்றெல்லாருக்கும் வருந்தீர்மானம் எவ்வளவென்று சொல்லமுடியாது. மேலும், பதினுலுபேரை உயர்ந்த செங்குத்தான மலையிற்கொண்டுபோய்க் கிழே தள்ளிவிழுத்தினபொழுது, அவர்கள் துண்டுதுண்டாய்ச் சிதறிப்போனுர்கள். இன்னும் அனேகர் கொல்லப்பட்டவிதம் எப்படியெனில், அவர்களுடைய இடையிலே கயிற்றைக்கட்டி மலையின்மேற் கொண்டுபோய், அவர்களை அந்தரத்திலே தூங்கவிட்டு, நீங்கள் செபம்பண்ணுகிறதைவிட்டு ஓயமாட்டீர்களோவென்று கேட்பார்கள். நாங்கள் மாட்டோமென்ருல் அடுக்கநிற்குமொருவன் கத்தியை எடுத்துக் கயிற்றை வெட்டுவான்; அவர்கள் கீழே விழுந்து சிதறிப்போவார்கள். வேருெருவனைப் பிடித்துக் கயிற்றிலே கட்டிச் செங்குத்து மலையில் கொண்டுபோனபொழுது, அவன் சொன்னதென்னவெனில், நான் செபம்பண்ணும் முகாந்திரத்திற்காகக் கொல்லப்படுவதால் இன்னுஞ் செபம்பண்ணிக்கொள்ளக் கொஞ்சஇடந்தாருங்களென்று கேட்க, இடங்கொடுத்தார்கள். அவன் முழந்தாட்படியிட்டு உரத்து ஆவலுடனே செபம்பண்ணி எழும்பித் தலையாரிகளைப் பார்த்து, நீங்கள் என் சரீரத்தை மாத்திரஞ் செங்குத்துமலையால் எறிந்துவிடுவீர்கள். என்னுத்துமாவோ மோட்சபதவிக்குப் போகிறபடியால், நீங்கள் அதற்கு ஒன்றுஞ் செய்துகொள்ள முடியாது. என் சிர[illegible] கொண்டனையிருக்கிறது என்க்கு [illegible]சென்ருன்.

இன்னும் [illegible]பைம்பதுபேர் மிக[illegible] பயங்கரமும் உபா[illegible] ஆக்கினை [illegible]த் தீர்ப்புபெற்றும் ஒருவனுதல் [illegible] நிலைத்து நின்[illegible] இந்த இரத்தச் சாட்சிகள் சிந்தின இ[illegible]த்தாயிற்று. முன் தின து[illegible] கிறிஸ்தவன் ஒருவனுக்காக இப்பொழுது பத்துப்பேரிருக்கிருர்கள். [illegible]த்துப்பேருக்குப்பதிலாக நூறுபேரிருக்கிருர்கள். இத்தீவை ஆளுகின்ற கெட்ட துட்ட ஸ்திரியானவள் கிறிஸ்துவென்கிற நாமந்தானும் இல்லாமற்பண்ணும்படிக்கு வெகுகாலமாய்த் தன்னுலான மட்டும் பார்த்தாலும் அவள்சத்து மெத்தப் பலிக்கவில்லை. பட்டத்துப் பிள்ளையாயிருந்த அவளுடைய ஒரே புத்திரன் தானும் இரத்தச் சாட்சிகளுடைய விசுவாசத்தைக் கற்றுக்கொண்டு அவர்களுக்குப் பாதுகாவலனுகிச் சொன்ன நம்பிக்கை என்னவெனில், இனிமேல் அவர்களைக் கொல்லுகிற மனிதன் தன்னை முன் வெட்டவேண்டுமென்றுஞ் சொன்னுன். இது கத்தருடைய செய்கை, அது எங்கள் கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கின்றது.

## நாலு வாலிப ஸ்திரிகள் ஞானஸ்நானம் பெற்றதைக் காட்டியது.

[Baptism of Four Tamil Girls at Madras.]

சென்னபட்டினத்தில் சர்ச்சு ஆவ் ஸ்கோத்துலாந்து என்னும் மிசியோன் பெண்பள்ளிக்கூடத்தில் படித்துவருகிற வாலிப ஸ்திரிகளில் நாலுபேர் விக்கிரகபத்தியைவிட்டுக் குணப்பட்டார்களென்கிறசெய்தியைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேம். அந்நாலு ஸ்திரிகளும் அநேகநாளாய் அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். அவர்களும் அவர்கள் தோழிகளில் சிலரும் சிலகாலமாய்க் கிறிஸ்துமார்க்கம் மெய்யென்றுகண்டு ஞானஸ்நானம்பெற ஆசையுள்ளவர்களாய் இருந்தார்கள். அந்தப்பெண்களில் மூத்தவளுடைய தாய் தகப்பன்மார் தங்கள் மகள் தங்கள் மார்க்கத்தின்படியுள்ள சடங்குகளைச் செய்ய வெறுப்பாய் இருக்கிறதைக்கண்டு பின்னும் அவளை அந்தப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினுல் ஒருவேளை அவள் மனசு கிறிஸ்துவேதத்தைப் பற்றிக்கொள்ளுமென்று சமுசயப்பட்டு, அவளைச் சென்னபட்டினத்தினின்று சற்றுத் தூரத்தில் இருக்கிற தங்கள் உறவின்முறையாரிடத்திற்கு அனுப்பினுர்கள். இந்த நடபடியைக் குறித்து மறுநாளில் மற்றப் பிள்ளைகள் கேள்விப்பட்டார்கள். அவர்களில் நாலுபேர் போதகரிடத்திற்குப் போய் நாங்கள் விக்கிரகாராதனையை வெறுத்துத் தள்ளவும் இயேசுநாதரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படியவும் மனசாயிருக்கிறேம். நீர் எங்களை எங்கள் வீட்டுக்கு அனுப்பினுல் எங்கள் தாய் தகப்பன்மார் எங்களைப் பள்ளிக்கூடத்துக்கு வரவிடமாட்டார்கள். ஆகையால் நாங்கள் இவ்விடத்திலே தங்க எங்களுக்கு ஒரு இடம் தாருமென்றுகேட்டார்கள். அவர்கள் சொன்னது மெய்யென்றும் அவர்கள் விருப்பம் நல்லதென்றும் போதகர் அறிந்து, அந்தப்பள்ளிக்கூடத்து ஆயாளிடத்தில் அவர்களை ஒப்புவித்தார். அவர்கள் வீட்டுக்குப் போகாததினிமித்தம் அவர்கள் தாய் தகப்பன்மாரும் பந்துசனங்களும் மிகவும் விசனமடைந்து அன்றைத்தினம் இரண்டு மூன்றுதரம் அந்தப்பள்ளிக்கூடத்துக்குப் போய் விசாரித்தார்கள். அப்பொழுது போதகர் அந்தப்பிள்ளைகள் கட்டாயமாயல்ல, அவர்கள் சுயமனசின்படி அவ்விடத்தில் தங்கியிருக்கிருர்களென்பதை அவர்கள் தாய் தகப்பன்மார் அறியவேண்டுமென்கிற நோக்கமாய்ப் பிள்ளைகளைக் கண்டு பேசும்படி அவர்களுக்கு இடங் கொடுத்தார். தாய் தகப்பன்மார் அவர்களைக் கண்டவுடனே அழுது, மக்களே நீங்கள் இங்கேயா வைக்கப்பட்டிருக்கிறீர்கள். நம்முடையவீட்டுக்கு வாருங்களென்று வருந்தி அழைத்தார்கள். அந்தப்பிள்ளைகள் தாய் தகப்பன்மாருடைய நயமும் பயமுமான வார்த்தைகளைக் கேட்டும் அவர்களுடைய கண்ணீரைக்கண்டும் மனங்கலங்காமல் அவர்களை நோக்கி நாங்கள் விக்கிரகாராதனை மார்க்கம் பொய்யென்று விட்டுவிட்டதுபோல நீங்களும் விடவும் நாங்கள் கிறிஸ்துமார்க்கம் மெய்யென்று ஏற்றுக்கொண்டதுபோல நீங்களும் ஏற்றுக்கொண்டு அதின்படிசெய்தால் நலமென்று தாழ்[illegible]தோடும் பக்திசொன்னுர்கள். [illegible] கண்டு அவளும் [illegible] வரும் சற்றே அமர்ந்தபொழுது அந்தப்பிள்ளை தாயைப் பார்த்து அம்மா, நான் உம்மோடே கூடவந்தால் என் இரட்சகரை விட்டு விலகவேண்டிவரும். நான் உமக்குக் கீழ்ப்பணிகிறதிலும் அவருக்குக் கீழ்ப்பணிகிறதே அதிக கடமையென்ருள். தாய் அவளைப்பார்த்து, நீ அனுசரித்திருக்கிற புதியவேதம் நீ உன் தாய்க்குக் கீழ்ப்படியாதபடி உனக்குப் படிப்பிக்கிறதா என்றதற்கு, அவள் அப்படியல்ல—பெற்றவர்களிடத்தில் அன்புகூரும்படி போதிக்கின்றது. ஆயினும் இயேசுநாதருடைய நாமத்தினிமித்தம் தாயையாவது தகப்பனையாவது மற்றெவைகளையாவது விட்டுவிடவேண்டியதாய் நேரிட்டால் அப்படியே செய்யும்படி கற்பிக்கின்றது. போதகர் இவைகளை எல்லாங் கண்டுங் கேட்டுமிருக்கையில் மனதுருகி அவள் தாயை நோக்கி, நான் உன் மகளை என் பிள்ளையைப்போல நன்ருய் விசாரித்துக்கொள்வேனென்று சில புத்திகளைச் சொல்லி, அவர்களெல்லாரையும் அனுப்பிவிட்டார். அதற்கடுத்த புரட்டாசிமாதம் முப்பதாம்தேதி அன்று ஓய்வுநாளில் அந்த நாலுபெண்பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெறும்படி கோவிலுக்குப் போனுர்கள். ஞானஸ்நானம் கொடுக்கிறதற்கு முன்னமே அவர்களுடைய குணப்படுதலின் தன்மையைக் குறித்தும் இயேசுநாதரில் நிலைத்திருக்கவேண்டிய அவசியத்தையும் அதின் வகையையும் ஞானஸ்நானத்தினுல் விளங்கும் பொருளையுங் குறித்து அவர்களிடத்தில் வினவினுர். அவர்கள் சந்தோஷம் உண்டாகத்தக்கதாகத் தகுந்த மாறுத்தரங்களைச் சொன்னதினுல் பிதாக் குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினுலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்பொழுது போதிக்கப்பட்ட போதனையினுலும் காணப்பட்ட திவ்விய கிரியையினுலும் அந்தப் பிள்ளைகளும் கூடயிருந்த சனங்களும் மிகவும் மனம் இளகினவர்களாய்க் கண்ணீர்விட்டார்கள். அந்த நல்லுணர்வு அவர்களுக்குள்ளே நிலைத்திருக்கும்படி பராபரன் கிருபைசெய்வாராக.

# உதயதாரகை.

௲௮௱௫௨ ஞூ. பங்குனி மீ. ௰௩ ௨.

## காற்றினல் உண்டாகும் பிரயோசனம்.

நாம் மூச்சுவிடுங் காற்றும் ஸ்நானம்பண்ணுந் தண்ணீரும் சூரியனுடைய கிரணங்கையும் சரிமுறையாய்ப் பரிமாறப்பட்டு வருங் காலத்தில் சரீரத்துக்குச் சுகத்தையும் முறைகேடாய்ப் பரிமாறப்பட்டு வரும்போது, அதற்குத் துன்பத்தையும் உண்டாக்குகின்றன. தண்ணீரைச் சுகதுன்பமென்னும் இரண்டு வேளைகளிலும், பரிமாறவேண்டிய முறைகளையும், அதனுலுண்டாகும் பலனையும்பற்றி முன்னே சொல்லியிருக்கிறேம்.

இம்முறை காற்ருலாகும் பிரயோசனங்களிற் சிலவற்றைப்பற்றிச் சொல்லுவோம். நாம் மூச்செடுக்கையில் அரைக்கோத்து அல்லது ஒரு கோத்துக் காற்றுவரைக்கும் எங்கள் நெஞ்சினிருபக்கங்களிலுமுள்ள இரண்டு நுரையீரலுக்குட் செல்லுகின்றது.

இவ்விரண்டு நுரையீரலும் இவையின் மத்தியிலிருக்கும் இரத்தாசயமும் நெஞ்சை நிறைவாக்குகின்றன. இந்த நுரையீரல்கள் கொல்லனது துருத்தியைப்போலக் காற்றை உள்ளிழுத்துப் பின்பு வெளியே தள்ளுகின்றது.

இவ்விதமாக நுரையீரலிற் செல்லுங் காற்ருனது அந்த நுரையீரலிற் கொப்புக்கொப்பாய்ப் படர்ந்திருக்கும் நாடிநரம்புகள் உள்ளிருக்கும் இரத்தத்தைச் சுத்திபண்ணுகின்றது.

சரீரமுழுவதிலும்உலாவி அசுத்தப்பட்டுக் கருமைகொண்டிருக்கும் இரத்தம் நுரையீரலிற்போகுங் காற்றினல் செம்மையடைகின்றது. இவ்விதமாய்ச் சுத்தமாக்கப்பட்டுச் சிவப்பாகாதிருந்தால் சரீரத்துக்குதவாமல் ஆளைக்கொல்லும். நாங்கள் மூச்சுவிடுகிற இந்தக்காற்ருனது நெஞ்சுக்குக் கீழ்ப்பட ஒருபோதும் இறங்கிப்போகிறதில்லை.

நாசித்துவாரங்களும் வாயைப்போலத் தொண்டைக்குட்போகின்றன. தொண்டையின் முற்பக்கத்தில் சுவாசநாடி துவங்கி நெஞ்சேலும்பின் பிற்புறமாகச்சென்று நெஞ்சிலிருகொப்பாய்ப் பிரிந்து அதிலிருபக்கங்களிலுமுள்ள இரண்டு நுரையீரல்களிலும் முடிகின்றது.

தொண்டையில் மிதப்பாய்த்தெரியமது சத்தகாரம். அது ஒரு முடிச்சல்ல, நுரையீரலுக்குக் காற்றுப் போகவும் வரவும் கூடிய ஒரு குழலாயிருக்கின்றது. சுத்தமானது உந்தியிலிருந்து எழும்பாமல் இந்தச் சத்தகாரத்திலிருந்தே எழும்புகின்றது. சத்தமுண்டுபடத்தக்க நரம்புகளும் இதிலிருக்கின்றன. சத்தகாரம் குழந்தைகளிற் சிறுசாயிருக்கிறதினல் அவர்கள் குரல் மென்மையாயும், அது வளர்ந்தவர்களிற் பருத்திருக்கிறதினல் அவர்கள் குரல் கனத்ததாகவும் இருக்கின்றது.

ஒருவன் நிமிஷத்துக்கு இருபதுதரம் அல்லது, மணித்தியாலத்துக்கு ஆயிரத்திருநூறுமுறை மூச்சுவிடுகிருன்.

ஓடும்வேளைகளிலும் வேலைசெய்யும் வேளைகளிலும் மூச்சு அதிகமாயுஞ் சுறுக்காயுமிருக்கின்றது. ஏனெனில், இரத்தம் அப்படிப்பட்ட வேளைகளில் நுரையீரலுக்குச் சுறுக்கு வருவதினலும் அதுமுழுவதும் சுத்தியாக்கப்பட வேண்டியதினலுந்தான்.

நாம் சுவாசிக்குங் காற்றுச் சுத்தமாயிருக்கவேண்டியது. அல்லாதிருந்தால் அது இரத்தத்தைச்சரிவரச் சுத்திபண்ணமல்விட அதினல் ஆளுக்குச்சுகவீனமுண்டாகும்.

நாம் சுவாசிக்குங்காற்றில் மூன்று பகுதிகளுண்டு. அவை இங்கிலீசில் (Oxygen) அக்கிச்சென் (Nitrogen) நாதுறசன் (Carbon) கார்போன் என்னப்படும். காற்றில் முந்தின இரண்டும் அதிகமாயுங் கடைசியானது குறைவாயுமிருக்கின்றது. காற்றில் கார்போன் (Carbon) எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவு அந்தக் காற்றுச் சுவாசிக்கத் தகாததாயிருக்கும். மூச்செடுக்கையில் உட்செல்லுங் காற்றிலுள்ள (Carbon) கார்போன் மெத்தக்கொஞ்சம். மூச்சுவிடுகையில் வெளிக்கிடுங் காற்று அதால் நிறைந்திருக்கின்றது.

ஒரு மூஞ்சூறு அல்லது பல்லியைப் பிடித்து அதை ஒரு குப்பியில் அடைத்துவைத்துப் பாருங்கள். அதை விட்டசமயத்தில் குப்பியில் உள்ளிருந்தகாற்றுச் சுத்தமானபடியால் யாதொரு வித்தியாசமில்லாமலிருக்கும். வரவர அதின் நுரையீரலிலிருந்து வெளிக்கிடும் (Carbon) கார்போன் குப்பிக்குள்ளிருக்குங் காற்றினுடன் சேர்ந்து அக்காற்றை அசுத்தமாக்க, அதைச் சுவாசிக்கும் மூஞ்சூறுக்கு அல்லது பல்லிக்கு வசதியீனமுண்டாகும். பின்னுங் கொஞ்சவேளைகூட அக்குப்பியிலிருக்கவிட்டால் அது செத்துப்போம்.

எப்போதும் இடைவிடாமல் சுவாசிக்கப்பட்டுவருங் காற்றுப் பழுதடைகின்றது. ஆனபடியால் அசுத்தமான காற்று உட்செல்லாதபடிக்கு வீடுகளைப் பூட்டிவைக்கக் கூடாது. காற்றிலடங்கிய பகுதிகளில் நச்சுக்காற்ருகிய (Carbon) கார்போனே பாரமுள்ளதானதால் அதுநிலத்திற்படிகின்றது. ஆதலாற் பணியப்படாமல் கட்டிலிற்படுப்பதே உத்தமம்.

ஒரு வீட்டிலே, மேல்வீட்டிற் படுக்கிறவர்களுக்குச் சூர்ச்சலுண்டுபடாதிருக்க அந்த வீட்டின் கீழ்வீட்டிலே படுக்கிறவர்களுக்கு அது உண்டாகின்றது. இதினல் மற்றும் நச்சுக் காற்றுகளும் நிலம்வழியே வீசுகின்றதென்று அறிகிறேம்.

சுத்தவீனமான காற்றை எப்போதும் சுவாசிப்பது சூலைமுதலிய வியாதிகளுக்கும் ஒரு காரணமாயிருக்கின்றது.

---

இந்தத்தீவில் முத்துச்சலாபம் உண்டே, அந்த இடத்தில் வருஷந்தோறும் குத்தகை விற்ருலன்றி ஒருவரும் முத்துச்சிப்பி குழித்து எடுக்கக்கூடாதே. ஆனல் வேறொரு பெரிய சமுத்திரம் இருக்கிறது. அது உலகம் முழுவதையும் அடக்கியிருக்கின்றது. அதிலொரு நேரத்திலாவது ஒருபகுதியில் சூரியகிரணம் அற்றுப்போகாதிருந்தும் காரிருள் தங்கியிருக்கின்றது. உலகமுழுவதையும் விலையாகக் கொடுத்தாலும் கிடைப்பதற்கரிய ஆணிமுத்துகள் அந்தச்சமுத்திரத்தில்அனேகமுண்டு. அங்கேஅடிக்கடிகுத்தகை விற்பாருமில்லை. கொள்ளத்தக்கவர்களுமில்லை. ஆகிலும் அந்த முத்துக்களை அடையாத எவர்களும் ஒருகாலத்தும் பாக்கியசாலிகளாகக் கூடாது. இவ்வளவு அரிதும் விலைமதிக்கப்படாததுமான முத்துக்களைப்பெற்றுக்கொள்ளஓர்வகையுண்டு. இவைகளையுடைய ஏகாதிபதியிடத்தில் ஒரு தருமகர்த்தாவானவர் உலகத்தில் ஒருவரிடத்தும் இல்லாததும் யாவிற்கும்மேலுயர்ந்ததும் தம்மிடத்தில் மாத்திரமுள்ளதுமாகிய விலையுயர்ந்த பொருளைக்கொடுத்துக் கொண்டார். அதை யாவரும் எளிதிலறியும்பொருட்டுத் தமது வாக்குமூலமாய் ஒரு வேதத்தையும் விளம்பரம்பண்ணினர். அதை வாசித்துப்பார்த்து அந்த வழியாக முத்துக்களையெடுத்து அனுபவிக்கலாமென்று தமது தாசரைக்கொண்டு சிறு துண்டுப் புத்தகங்களும் எழுதுவித்து வீடுகள்தோறும் வாசிப்பித்தார். ஆனல் பற்பலர் அனுமானத்தால் முத்துக்களுண்டென்று அறிந்து ஏகாதிபதியின் சம்மதியின்றித் தரும கர்த்தாவின் சுட்டளையுமின்றிச் சுயவல்லமையால் அதைத் தாங்கள் பெற்றுக்கொள்ளலாமென்று அந்தச் சமுத்திரத்தண்டைபோய்த் துறைதெரியாமல் குழித்ததினுற் சிலரைச் சுரு விழுங்கிவிட்டது. சிலர் தங்கள் இடுப்பில் கட்டிய கயிறு அறுந்துபோனதினல் காணமற்போனர்கள். சிலர் ஒட்டைத்தோணியிலேறிக் குழிக்குமிடமறியாமற் போனர்கள். வேறு சிலர் தோணியுமில்லாமையால் மோசமாய் யோசனைபண்ணுகிருர்கள். சிலர் அப்படிப்பட்ட முத்துக்களில்லையென்று சாதித்துக் கண்குருடரானர்கள்.

சிலபுத்திசாலிகள் ஏகாதிபதியின் அனுமதிகொண்டு தரும கர்த்தாவின் தாசரது துண்டுமூலமாயும் துண்டின்றியும் அவரருளிய வேதத்தைப் பிடித்து அதிலே காட்டிய வகைப்படிபோய் முத்துக்களைக் கண்டெடுத்து அவைகளைக் கடாட்சித்தவரது செயலினல் அதின்பிரகாசத்தில் மகிழ்ந்து எக்காலத்தும் பாக்கியவான்களாய்ப் பஞ்சத்திற்கும் நோய்க்கும் பேய்க்கும் பகைக்கும் மரணத்திற்கும் நரகத்திற்கும் அஞ்சாதிருக்கிருர்கள்.

இதினல் சன்மார்க்க புத்தகங்களை எவ்வளவு கவனமாய் வாசிக்கவேண்டும். வேதத்தை எவ்வளவாய்த் தியானிக்கவேண்டும்.

---

(Anecdotes of the Elephant.)

யானைகளைப்பற்றிய கதைகள்.—சிறிதுயானைகளுக்கிடையிடையே பைத்தியம் வருகிறதுண்டு. திருநெல்வேலிக் கோவிற் திருவிழாவிலொருநாள் ஒரு பிராமணக்குருக்கள் யானையிலேறி விக்கிரகத்துக்கு நைவேத்தியம் பண்ணுகையில் அது விசர்கொண்டு முன்னுக்கு நின்ற தன்பாகனைத் தாவிப்பிடித்துக் கீழேவிட்டுக் காலாலே மிதித்துக் கொன்றது. பிராமணன் பயந்து சட்டெனஇறங்கி ஓடியொளித்துவிட்டான். யானையுங் கோவிலுக்குள்ளே நெருங்கி, இரண்டுபக்கத்திலுமிருந்த விளக்குகளைத் துதிக்கையாலெடுத்து நெரித்துப்போட்டது. யானையாற் கொல்லப்பட்ட பாகனுடைய மகனுந் தன் பிதாவிறந்துபோனதற்காக அழுதுகொண்டுநில்லாமல், அதற்குப் பிறகாலே போய் வாலிலே பிடித்து முதுகிலேயேறித் தோட்டியினலே குற்றினன். அந்நேரமதற்கெவ்வளவு பைத்தியமிருந்தாலும் யாதொருமோசமுஞ் செய்யாமல் அடங்கித் தன்னைக் கட்டும்படி நின்றது.

யானையைப்பற்றி வேறொரு கதையென்னவெனில், மலையாளத்திராசாவின் முதன் மந்திரி மரமடுக்குகிறதற்காக நாகர் கோவிலுக்கு ஒரு யானையையும் அதின் பாகனையும், அவனை நம்பாததினல் அவன் யானைக்கேப்போதும் நன்ருய்ச் சாப்பாடு போடுகிருனே என்பதைப் பார்க்கும்படிக்கு ஒரு துரைச்சாணிக்குக் காகிதத்தையுங் கொடுத்து அனுப்பி வைத்தார். ஒவ்வொரு நாளும் அந்தப்பாகன் துரைச்சாணியுடைய விருந்தைக்குக் கிட்ட யானையையும் அதற்கு வைக்கிற அரிசியையும் கொண்டுவந்து அவளுக்குக் காட்டி வைத்துவருவான். இப்படியிருக்க, ஒருநாட் பின்னேரம் மறுவேளையிலும் அரிசி கொஞ்சமாயிருக்கிறதைத் துரைச்சாணி கண்டு குறைசொல்லி, நீகளவெடுத்துப் போட்டாயென்று பாகனைச் சாட்டினள். அதற்கவன் என்னம்மா; நானென் சொந்த அருமையானபிள்ளையிடத்திற் களவெடுப்பேனே? ஒருபொழுதுஞ் செய்யமாட்டேனென்று வானத்தைப் பார்த்துச் சத்தியம்பண்ணித் தன்னிலே சற்றுங் கள்ளமில்லையென்று காட்டினன். உடனே அந்தயானை அவனுடைய மடியிலே துதிக்கையைவிட்டுச் சீலையை ஆராய்ந்தவிழ்த்துத் தன் சாப்பாட்டிற் களவெடுத்த அரிசியைத் துரைச்சாணிக்கு முன்னே கொட்டிவிட்டது.

---

## கிரகசாரவிளக்கம்.

இந்தமாதம் பதினந்தாந் தேதி திங்கட்கிழமை காலமே எட்டரைமணிபோலச் சனியுஞ், சுக்கிரனுங் கூடிநடக்கையால், சனியானது சுக்கிரனுக்குத் தென்பக்கமாய் மூன்றுபாகை தூரத்திலே நிற்கும். பதினலாந்தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் இந்த இரண்டு கிரகங்களும் ஒன்றையொன்று கிட்டிவருகிறதாகத் தோற்றும்.

சனியானது சுக்கிரனிலும் ஆயிரந்தரம் பருப்பமுள்ளதாயிருந்தாலும் அது எங்களுக்கு வெகு தூரத்துக்கப்பாலிருக்கிற நியாயத்தினல், எங்கள் கண்ணுக்கு மிகச் சிறிதாகத் தோன்றும்.

பதினலாந்தேதி எட்டுமணிபோலச் சுக்கிரனுடனே கூடி நடக்கின்ற ஏர்சல் என்கிற கிரகமானது சுக்கிரனைப் பார்க்கிலும், தொண்ணூற்றுக்கதிகமான பருப்பமுள்ளதாயிருந்தாலும் அதுஎங்களுக்கப்பால் வெகுதூரத்தில் நிற்கிறபடியால், எங்கள்கண்ணுக்குத் தோற்றுதிருக்குமென்ப தெப்படியெனில், பெரிய கடதாசிக்கோடியைக்கட்டி ஆகாசத்திலே பறக்கவிடும்பொழுது அது தூரத்தில் நிற்பதினல் எங்கள் கண்ணுக்குச் சிறிதாகத் தோற்றுகிறதால் சிறபிள்ளைகள்தானும் துலாம்பரமாய் அறிவார்கள். தூரதிருட்டிக் கண்ணடி மூலமாய் ஏர்சலென்ற இந்தக் கிரகத்தைப்பார்த்தால், சுக்கிரனுடனே கூடித் தெற்காய் ஒரு பாகைக்கு மேலே நின்றும், அது எங்களுக்குத் தோன்ருது. சனி, சுக்கிரன், ஏர்சல் என்ற இந்த மூன்று கிரகங்களும் ஒரே நேரத்தில் மேடராசி மேற்குப் பகுதியிற் கூடி கீழ்ப்புறமாய் நேரோட்டக் கதியாய்ச் செல்லுமென்பதை இந்ததேசச் சோதிட சாஸ்திரிகள் அறியச் சம்பவித்தால் ஏதோ உலகத்துக்கு வாழ்வு அல்லது தாழ்வு வருமென்பதற்கு ஒரு சகுனமென்று கணிப்பார்கள். ஆனலும் அவர்கள் இந்த ஏர்சல் என்ற கிரகத்தாலும் அதினுடைய ஆறு சந்திரர்களாலும், சனிக்குள்ள, ஏழு சந்திரர்களாலும் உலகத்துக்கு நயநட்டம்வருமோவென்பதைத் தங்கள் சோதிட சோஷியங்களிலொருக்காலும் எழுதி வைக்கவில்லையே.

---

கண்டி—இற்றைக்குச் சிறிது நாளைக்கு முன் மாலைநேரத்திற் காட்டுப்பன்றி சுடும்படி இரண்டு சிங்களவர் போனர்கள். ஒருவன் துப்பாக்கிவைத்துக்கொண்டு காட்டுக்குக்கிட்டநிற்க, மற்றவன் பன்றிகளைத் துரத்திவிடும்படி காட்டுக்குள்ளேபோனன். பற்றைக்கெதிர்ப்பக்கமாய் ஒரு சத்தங்கேட்டது. துவக்குவைத்திருந்தவன் அதை மிருகமென்றுநினைத்துச் சுட்டபொழுது, துவக்கு மற்றவனுடைய சந்திலே பட்டுக் கொஞ்சநேரத்தாலே இறந்துபோனன்.

---

கற்குத்தா—கற்குத்தாவிலொருபகுதியில் நெருப்புப்பற்றினதினல், ஓட்டினல்வேயாத அஞ்ஞூறுவீடுகளுக்குமேலே எரிந்துபோனதுமன்றிஅஞ்சுபேர் சீவமோசம்போனர்கள். அனேக ஆடுமாடுகளும் எரிந்துபோயின. அக்கினியிற்சேதமாய்ப்போகாமல் மீதியாயிருந்த பொருள்களைக் கள்ளரெடுத்துக்கொண்டுபோய்விட்டதினல், வறிய சனங்கள் மெத்த நட்டமடையவேதுவாயிற்று.

---

E. S. என்று கையொப்பம்வைத்த ஆள் தன்னுடைய முழுக் கடிதத்தையும் எங்களிடம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

# MORNING STAR.

## Jaffna, March 11th, 1852.

### CIRCULATION OF THE SCRIPTURES, TRACTS, AND OTHER BOOKS.

At this stage of progress of missionary and educational establishments in this island, it is a question of no small importance, by what *means* can the numerous publications now in store, and which may be multiplied to any desirable extent, be most extensively circulated, carefully preserved, and profitably read? Should they be gratuitously furnished, or sold at reduced prices? As this is a question of general interest, and which can be satisfactorily settled only by being brought to the test of experiment, we have much pleasure in giving the result of experiments made by the Bombay Tract and Book Society, as contained in the following extracts from the last report of the society:

It is gratifying to report that the plan of putting vernacular tracts and books into circulation by sale, rather than gratuitously, has met with the almost unanimous approval of the friends of the cause in Western India. Its practicability has been fully established. It is now adopted at most of the mission stations; and the general testimony is that the tracts are in consequence more valued, and are far more likely to prove useful. The price put upon them is small, but sufficient to secure their preservation. And instead of preventing the circulation of tracts, the fact that a price is asked for them seems rather to awaken a desire to possess and peruse them.

The total issues of the past year have been 67,514. This is at least double the usual amount. With trifling exceptions, all the issues of the year have been paid for according to the rates of the printed catalogue. This shows that there is a real desire for these publications among the people. The tracts are generally put up in a neat, yet durable style. They are indeed small books, rather than tracts, and most of them will be carefully preserved and read for years to come. Not unfrequently they are sold by one to another, and thus get a wider circulation, and exert a greater influence. Cases sometimes occur in which individuals purchase a greater or less supply for sale in distant places, and thus become, in a manner, the voluntary colporteurs of this society.

### OCULAR ASTRONOMY, No. 4.

On Monday, the 15th instant, at half past 8 o'clock A. M., the planets Saturn and Venus will be in conjunction, i. e. in the same point of celestial longitude,—Saturn being at the time three degrees south of Venus. On the evening of the 14th, these planets may be seen to be nearing each other. While gazing at them, we have a brilliant illustration of the truth that things are not always what they appear to be. For, although Saturn is in reality more than a thousand times larger than Venus, it appears to be much smaller. This is owing to its comparatively greater distance from us. For a similar reason, i. e. its great distance from us, the planet Herschel, which will be in conjunction with Venus at 8 o'clock on the same evening, the 14th inst., will be invisible to the naked eye, though nearly a hundred times larger than Venus. The little boys may understand how this happens, if they will consider how *small* their *large* kite appears to be when high up in the air. If Herschel be viewed through a telescope of sufficient magnifying powers, it will be seen to be, when in conjunction, but little more than one degree south of Venus. If the Hindu astrologers were aware that these three planets were in conjunction with each other almost at the same time in the western part of the constellation Aries, and all in the direct course eastward, they would doubtless prognosticate some surprising results of weal or woe; but they have never taken the influences of the magnificent planet Herschel, together with his six moons into their astrological system, nor the seven moons of Saturn!

D. P.

☞ We cannot give our usual summary of "overland intelligence," on account of the non-arrival of the mail. Great fears are entertained for the safety of the steamer Haddington. The Colombo Observer of the 4th inst. says:—"Anxiety is becoming deep and general. From eight to ten of the expected passengers are relatives of some of the best known residents of Ceylon. In one case a gentleman expects his wife, two daughters, and a son. To such parties suspense must be terrible."

Baptism.—We are requested to state that on Sabbath, Feb. 29th, two young men of the Wesleyan Mission school at Cattavaly were baptized by Rev. Mr. Walton.

Advise not what is most pleasant but what is most useful

### QUARTERLY MEETING OF THE JAFFNA T. A. S.

We have time and space merely to notice in few words that the first quarterly meeting of this society was held on the evening of the 8th inst., in St. Paul's school room,—Henry Pole, Esq., one of the patrons of the society, in the chair. A respectable audience was present on the occasion, consisting chiefly of educated Hindus. In accordance with a previous request from the committee of arrangements, the meeting was first addressed by the Rev. D. Poor. His subject was the "*ways and means,*" for carrying forward the object for which the society had been organized.

Subsequently the meeting was addressed in Tamil, by Mr. C. Wyman, of the Wesleyan Mission. The subject matter of his address consisted mainly of pertinent quotations, and striking illustrations of the evils of intemperance, drawn from standard classic writings of the Hindus. The prevailing sentiment of the meeting was, that the society had entered upon an important undertaking, in the prosecution of which they confidently expect to be sustained and assisted by the great body of the native population. The three points suggested by the first speaker on the subject of ways and means, were, 1. That the "Jaffna Total Abstinence Society," which already embodies a large proportion of the educated native inhabitants of the town—and is now under the patronage and guidance of European gentlemen, be regarded as the *central temperance society of the northern province;*—that they put themselves in direct and continued communication with the numerous total abstinence societies which are being formed in every direction—that the central society not only open a correspondence with these auxiliary societies, but request that as far as may be practicable, they will send delegates to the quarterly meeting of the central society.

2. That whereas the temperance reform now in progress—if we would have it thorough-going and permanant—must be based upon enlightened conviction of its dire necessity and a clear understanding of its far reaching utility, it was suggested secondly, that a *temperance library be formed by the central society.* This might probably be done at comparatively little or no expense to the society,—as we might confidently expect that donations of books would be made to such a library, both by the friends of the temperance movement in the island, and by parent temperance societies in Europe and America. Such a library is urgently needed for effectively carrying out the course of temperance lectures, at these quarterly meetings, on which the society have already entered. It would be a pleasing bond of union between the members of the society,—and moreover, it would be a center of light and knowledge which would extend its salutary influence to the remotest temperance organizations in the province.

3. And finally, that a sub-committee of *visitation* for the town and of *suggestion* to the province, be appointed with special reference to a general enlistment and embodiment of the entire population, for the suppression of the prevailing evils arising from the use of intoxicating drinks, and for the promotion of temperance, sobriety, and good order throughout this favored province.

AN ATTENDANT AT THE MEETING.

### SERMON ON INTEMPERANCE.

